# தன்னாட்சி, மக்களின் குரல் (Voice of People),
# அறப்போர் இயக்கம், தோழன் இயக்கம் மற்றும்
## Institute of Grassroots Governance (IGG)

**முகவரி:** 69, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600001.
**மின்னஞ்சல் :** thannatchi@gmail.com
**தொடர்புக்கு:** எஸ். நந்தகுமார், பொதுச் செயலர், தன்னாட்சி/ 90032-32058

---

**12.05.2021**

**பெறுநர்**

**உயர்திரு மு.க.ஸ்டாலின் அவர்கள்,**
**முதலமைச்சர்,**
**தமிழ்நாடு அரசு,**
**தலைமைச் செயலகம்,**
**சென்னை-600009.**

**அய்யா,**

**பொருள்:- கொரோனா தடுப்புப் பணிகளில் உள்ளாட்சிகளை ஈடுபடுத்துவது குறித்து சமூக இயக்கங்களின் கோரிக்கை தொடர்பாக.**

வணக்கம்! புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் தங்களுக்கு, உள்ளாட்சிகளையும், பங்கேற்பு ஜனநாயகத்தையும் வலுப்படுத்த செயற்படும் தன்னாட்சி, மக்களின் குரல் (Voice of People), அறப்போர் இயக்கம், தோழன் இயக்கம் மற்றும் Institute of Grassroots Governance (IGG) போன்ற சமூக இயக்கங்களின் சார்பாக வாழ்த்துக்கள்!

மிகுந்த சவாலான காலகட்டத்தில் பொறுப்பேற்றிருக்கும் தங்களது தலைமையிலான அரசு, பதவியேற்ற உடனேயே கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் துரிதமாகச் செயல்பட்டு, தமிழகத்தின் பல தரப்பு மக்களின் பாராட்டுகளைப் பெற்று வருகிறது. மேலும், தாங்கள் கொரோனா

தடுப்பு நடவடிக்கைகளைத் தமிழகத்தில் ஒரு மக்கள் இயக்கமாக கொண்டு செல்ல வேண்டும் எனக் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 800 படுக்கை வசதிகள் கொண்ட தற்காலிக கொரோனா மருத்துவமனையை நிறுவியது, பிரதமருக்குக் கடிதம் எழுதி, தமிழகத்திற்குரிய ஆக்சிஜன் ஒதுக்கீட்டை அதிகரித்திருப்பது, ஒன்றிய அரசிடமிருந்து ஆக்ஸிஜனைக் கொண்டு வர குறைந்தபட்சம் 20 ஐ.எஸ்.ஓ கிரையோஜெனிக் கன்டெய்னர்களையும் ரயில் வசதியையும் கேட்டு இருப்பது, கொரோனா பெருந்தொற்று அதிகமுள்ள 14 மாவட்டங்களை அடையாளம் கண்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா இரண்டு அமைச்சர்கள் வீதம் கண்காணிப்புப் பொறுப்பினை ஒப்படைத்திருப்பது, இந்த மாத இறுதிக்குள் 12 மாவட்டங்களில் கொரோனாவுக்கான சித்த மருத்துவ சிகிச்சை மையங்களைத் துவங்கத் திட்டமிட்டு இருப்பது என மிக விரைவாக ஒன்றிய அரசிடமிருந்து பெற வேண்டியவற்றைப் பெற்றும், மாநில அரசு மேற்கொள்ள வேண்டிய பணிகளைத் துரிதப்படுத்தியும் செயல்பட்டு வரும் தமிழக அரசினைப் பாராட்டுகிறோம். அதே நேரத்தில், தமிழகத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் உள்ளாட்சிகளின் பங்கேற்பும், பங்களிப்பும் மிகக் குறைவாகவே உள்ளது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

கொரோனா தடுப்பு நடவடிக்கையை மக்கள் இயக்கமாகக் கொண்டு செல்வதற்கு, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 514 மாவட்ட ஊராட்சி பிரதிநிதிகள், 5090 ஒன்றிய ஊராட்சி பிரதிநிதிகள், 9624 ஊராட்சிமன்றத் தலைவர்கள் மற்றும் 76,694 கிராம ஊராட்சி பிரதிநிதிகள் ஆகியோர் முனைப்புடன் பங்கேற்கும் வகையில் தமிழக அரசு திட்டமிடுவது அவசியம். தமிழகம் முழுக்க உள்ள இந்த மக்கள் பிரதிநிதிகள் நிச்சயம் கொரோனா பரவலைத் தடுக்க பெரும் பங்காற்ற முடியும்.

கொரோனா முதல் அலை வந்த போது, தமிழகம் தவறவிட்ட இந்த அணுகுமுறையைக் கேரளா மற்றும் ஒடிசா மாநில அரசுகள் சரியாகப் பயன்படுத்தி, உள்ளாட்சிகள் களத்தில் செயல்படுவதை உறுதிப்படுத்தி, மிகத் துரிதமாக கொரோனாவை கட்டுக்குள் கொண்டு வந்தன என்று பல ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. கொரோனா தடுப்பு நடவடிக்கையில் கிராம

பஞ்சாயத்துகளை வலுப்படுத்திய ஒடிசா அரசு, பஞ்சாயத்து எல்லைக்குள் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க மாவட்ட ஆட்சியருக்கு இணையான அதிகாரத்தை ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்கி உத்தரவிட்டது. அதேபோல கேரள அரசும் ஊராட்சி அளவிலான கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளைக் களத்தில் இறக்கிவிட்டது. மேலும், 'குடும்ப ஸ்ரீ' எனும் மகளிர் குழு இயக்கத்தையும் ஈடுபடுத்தி, ஊரடங்கு காலத்தில் ஏழை எளியோருக்கு உணவு வழங்கச் சமுதாய உணவகங்களை ஏற்படுத்திப் பல பட்டினிச் சாவுகளை தடுத்தது கேரள அரசு.

ஆனால், பல ஊராட்சித் தலைவர்களோடு இணைந்து செயல்படும் எங்களைப் போன்ற சமூக அமைப்புகள், தமிழக ஊராட்சிகளில் தற்போது பார்க்கும் சூழல் வரவேற்கத் தக்கதாக இல்லை. உரிய நிதி ஒதுக்கீடு இல்லாமலும் மேலிருந்து பிறப்பிக்கப்படும் கட்டளைகளைச் செய்வதற்காக மட்டுமே இருக்கும் அதிகாரமற்ற அமைப்புகளாகவே தற்போது தமிழக உள்ளாட்சிகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

கிராம ஊராட்சி அளவில் நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான உதவிகளைச் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகள் மூலம் செய்வது உள்ளிட்டப் பணிகளைச் செய்வதற்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் இவர்களைத் தாண்டி, பல்லாயிரக்கணக்கான உள்ளாட்சி பிரதிநிதிகளைக் களத்தில் இறக்குவது தற்போதைய சூழலில் மிகத் தேவையான நடவடிக்கையாக இருக்கும்.

இந்தப் பின்னணியில், சமூக இயக்கங்களின் சார்பாக கீழ்க்கண்ட கோரிக்கைகளைத் தமிழக அரசுக்கு முன்வைக்கின்றோம்.

1. கிராமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளின் பங்கேற்பையும் பங்களிப்பையும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் உறுதிப்படுத்த தமிழக அரசு முனைய வேண்டும். ஊராட்சிமன்றத் தலைவர்களை தொடர்ந்து கலந்தாலோசனை செய்யும் கட்டுப்பாட்டு கட்டளை மையம் (War room) ஒன்றை ஒவ்வொரு மாவட்டத்திலும்

அமைத்து, கொரொனோ தடுப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

2. உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறாத 9 மாவட்ட ஊரக உள்ளாட்சிகள் மற்றும் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் அரசு அலுவலர்களையும், தன்னார்வக் குழுக்களையும் கொரோனா தடுப்புப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும்.
3. உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கப்படும் 15 வது நிதிக்குழு நிதியின் அடுத்த தவணை ரூ. 533 கோடி தற்போது விடுவிக்கப்பட்டிருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். கிராம ஊராட்சி பொது நிதி மற்றும் 15வது நிதிக்குழு நிதி ஆகியவற்றைக் கொண்டு கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், மருத்துவ முகாம்கள் நடத்துதல், நோய்த்தொற்று ஏற்பட்டவர்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள கிராமப் பொது இடங்களை ஏற்பாடு செய்தல், தேவையான சுகாதார பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்குச் செலவிட்டுக் கொள்ள, ஊராட்சிகளுக்குத் தமிழக அரசு உரிய சுதந்தரத்தையும் வழிகாட்டுதலையும் வழங்க வேண்டும். குறிப்பாக, கிராம ஊராட்சிகளில் ஒன்பதாம் எண் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் மத்திய நிதிக் குழு நிதி தேவையான அளவு இருப்பு இருந்தாலும், செலவழிக்க முடியாத நிலையில் ஊராட்சிகள் உள்ளன. முந்தைய ஆட்சிக்காலத்தில் அலுவலர்களின் வாய்மொழி உத்தரவால் முடக்கப்பட்ட நிலையில் இருக்கும் இந்த நிதியை, ஊராட்சிகள் தற்போதைய பேரிடர் காலத்தில், உரிய நிவாரணப் பணிகள் செய்ய பயன்படுத்திக்கொள்ள உத்தரவிட வேண்டும்.
4. தமிழகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களை அங்கீகரித்து, கிராம பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கியது கடந்த கால திமுக அரசு. தற்போது வலுவாக உள்ள பஞ்சாயத்து அளவிலான மகளிர் கூட்டமைப்புகளை கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும். கிராம ஊராட்சி அளவிலான மகளிர் குழுக்களின் கூட்டமைப்புகள் மூலம், கிராம அளவில் இந்த ஊரடங்கு காலத்தில் உணவின்றி ஒரு நபரும் பாதிக்கப்படாத நிலையை ஏற்படுத்தவேண்டும். சமுதாய உணவுக் கூடங்கள் மூலமாகவோ, குழுக்கள் மூலம் உணவு சமைத்து வழங்குவது மூலமாகவோ இதனை

மேற்கொள்ளச் சம்பந்தப்பட்ட மாவட்ட மகளிர் திட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

5. கிராமப்புறங்களில் சமூக இடைவெளியுடன் 100 நாள் வேலைத்திட்டம் தொடர்ந்து நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும். மேலும், 55 வயதிற்கு மேல் உள்ள முதியவர்களுக்கு 100 நாள் வேலை வழங்கக் கூடாது எனத் தமிழக அரசு உத்தரவிட்டு இருப்பதாக ஊடகச் செய்திகள் மூலம் தெரிய வருகிறது. அவ்வாறு பணிகள் வழங்கப்படாத முதியவர்களுக்கு உரியப் பொருளாதார உதவியையும் மருத்துவம் மற்றும் உணவு ஆகியவை தடையின்றிக் கிடைக்கவும் ஊராட்சிகள் உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட வேண்டும்.
6. நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல்நிலை சிகிச்சை அளிக்க ஊராட்சி அளவில் முகாம்களை அமைப்பது சிறந்த அணுகுமுறையாகப் பார்க்கப்படுகிறது. இதனைக் கடந்த ஆண்டு செயல்படுத்திய ஒடிசா மாநிலத்தில் நோய்த்தொற்று கட்டுக்குள் வந்தது மட்டுமல்லாமல் தொற்று பரவாமல் தடுக்கப்பட்டது என்பதும் தற்போது தெரியவந்துள்ளது. தமிழகத்திலும் கிராம பஞ்சாயத்து அளவில் முகாம்கள் ஏற்படுத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான சேவைகளைச் செய்ய ஊராட்சிகள் அனுமதிக்கப்பட வேண்டும்.
7. சித்த மருத்துவம் உள்ளிட்ட மரபு மருத்துவ முகாம்களை, தொற்று அதிகம் உள்ள மாவட்டங்களில் ஊராட்சி அளவில் அமைப்பது மிகுந்த பலனை அளிக்கும். பொது மக்களுக்கு நோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரிக்கவும், தீவிரம் குறைந்த தொற்று உள்ளவர்களை குணப்படுத்தவும் இவை உதவும். இதனால், மாவட்ட மருத்துவமனைகள் உள்ளிட்ட மருத்துவமனைகளுக்கு வரும் கூட்டம் வெகுவாக குறையும். ஊராட்சிகள் இவற்றை ஒருங்கிணைப்பதில் திறமையுடன் செயல்பட முடியும்.
8. ஊராட்சி அளவில் உள்ள மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றவர்கள், நாள்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், தனிமையில் இருக்கும் முதியவர்கள் ஆகியோருக்கு இந்த ஊரடங்கு காலத்தில் தேவையான மருத்துவ வசதிகள் உள்ளிட்டவை தடையின்றி கிடைப்பதை ஊராட்சிகள் உறுதி செய்ய அரசு உத்தரவிட வேண்டும்.

9. ஊராட்சி அளவிலும், அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் கொரோனா குறித்த தேவையற்ற அச்சத்தை நீக்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மன அழுத்தத்திற்கு ஆலோசனைகள் வழங்கவும் வல்லுநர்களின் உதவியோடு உள்ளாட்சிகளை ஈடுபடுத்த தமிழக அரசு முனைய வேண்டும்.
10. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் மாவட்ட அளவிலான ஊரக உள்ளாட்சி அலுவலர்களின் தேவையற்ற தலையீடுகள் தவிர்க்கப்பட்டு, கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஊராட்சிகள் சட்டத்துக்கு உட்பட்டு சுதந்தரமாகச் செயல்படுகிற சூழலை உறுதி செய்ய வேண்டும்.
11. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான உதவிகளைச் செய்யக் கிராம ஊராட்சிகள் கேட்டுக் கொள்ளப்படவேண்டும்.
12. நோய்த்தொற்று பாதிக்கப்பட்டவர்களின் தகவல்களைச் சேகரிக்கவும், சுகாதாரத்துறையோடு தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும் கிராம ஊராட்சிகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.

இந்த சவாலான பெருந்தொற்றினை கட்டுக்குள் கொண்டு வரவும், நோய்ப் பரவலிலிருந்து முழுமையாக விடுபடவும், உள்ளாட்சிகளின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் என்பதனை பல உலக நாடுகள் மட்டுமன்றி, கேரளா, ஒடிசா போன்ற இந்திய மாநிலங்களும் நிரூபித்துள்ளன. தமிழகமும் அந்த வழியில் செயல்பட்டு, கொரோனா தடுப்புப் பணிகளில் உள்ளாட்சிகளைப் பங்கெடுக்க வைத்து விரைவில் நோய்த் தொற்றிலிருந்து முழுமையாக விடுபட வேண்டும் எங்களைப் போன்ற சமூக இயக்கங்களின் எதிர்பார்ப்பு.

மிக்க நன்றி!

தங்கள் உண்மையுள்ள,



**(எஸ். நந்தகுமார்)**

**For தன்னாட்சி, மக்களின் குரல் (Voice of People),**
**அறப்போர் இயக்கம், தோழன் இயக்கம் மற்றும்**
**Institute of Grassroots Governance (IGG)**